INSTITUTE of MENTAL HEALTH
National Healthcare Group

Buangkok Green Medical Park
10 Buangkok View
Singapore 539747
Tel: (65) 6389 2000
Fax: (65) 6389 1050
www.imh.com.sg

# நோயாளிகளின் தகவல் படிவம்
PATIENT INFORMATION SHEET

மனநல கழகம் (IMH) / வூட்ப்ரிட்ஜ் மருத்துவமனை (Woodbridge Hospital) என்பது சிங்கப்பூரில் உள்ள ஒரு மேம்பட்ட உளவியல் மருத்துவமனையாகும் எங்கள் சேவைகளை தொடர்ந்து மேம்படுத்தி, எங்கள் நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் நன்கு கவனிக்கப்படுவதை உறுதி செய்கிறோம். ஒவ்வொரு நோயாளியும் தனித்தன்மை வாய்ந்தவர் என்றும் அவருக்கு தனிப்பட்ட தேவைகள், திறன், பண்புகள் மற்றும் நம்பிக்கைகள் உள்ளன என்பதையும் நாங்கள் அறிவோம். எனவே, எங்கள் மருத்துவமனைக்கு வருகைப் புரிபவர்களுக்கும், மருத்துவ ஆலோசனை அல்லது மருத்துவ சிகிச்சை பெற வருபவர்களுக்கும் பயன்மிக்க வசதியான ஓர் அனுபவத்தை வழங்க எங்கள் ஊழியர்கள் அனைவரும் முயற்சி செய்கின்றனர்.

எங்கள் மருத்துவமனை பல்திறன் கொண்ட நிபுணத்துவ குழு கவனிப்பு முறையைக் கையாளுகிறது. எங்கள் உளவியல் மருத்துவர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ நிபுணக்குழுவினர்கள் மற்றும் இதர ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர்க்கும் சிறந்தசேவையை வழங்கி நோயிலிருந்து முற்றாக குணமடைய அணைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். உங்கள் நோய், சிகிச்சை மற்றும் கவனிப்பு முறை குறித்து எங்கள் குழு உங்களுக்கு விளக்கமளிக்கும், கற்பித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும். உங்களுக்கு ஏதேனும், உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எங்கள் ஊழியர்களை அணுகவும்.

உங்கள் எளிதான குறிப்புக்கு, எங்கள் சேவைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**நிபுணத்துவ சேவைகள் (Specialist services)**

- சிறுபிள்ளைகள் மற்றும் இளம் பருவத்தினர் உளமருத்துவம் (Child & Adolescent Psychiatry)
- மனநோய் மருத்துவம் (General Psychiatry)
- முதியோர் உளமருத்துவம் (Geriatric Psychiatry)
- சட்டம் சார்ந்த உளமருத்துவம் (Forensic Psychiatry)
- போதை பழக்க அடிமை மருத்துவம் (Addiction Medicine)
- ஆரம்பக் கால மனநோய் சீர்ப்படுத்துவதற்கான தலையீடு (Early Psychosis Intervention)
- உள உணர்வும் மன உளைச்சலும் (Mood & Anxiety)சமூகம் சார்ந்த உளமருத்துவம் (Community Psychiatry)
- மறுசீரமைப்பு உளமருத்துவம் (Rehabilitation Psychiatry)
- இதர சுகாதார தொடர்புடைய சேவைகள் (Allied Health Services)
- உளவியல் மருத்துவம் (Psychology)
- மருத்துவ சமூக பணி (Medical Social Work)
- தொழில் துறை சிகிச்சை (Occupational Therapy)
- உடற்பயிற்சிச் சிகிச்சை (Physiotherapy)
- மருந்தகம் (Pharmacy)
- மருத்துவ வழக்கு நிர்வாகம் (Case Management)
- மற்றச் சேவைகள் (Other Services) (குறிப்பு: இவை வெளிப்புற ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படும் சேவைகள்)
- சோதனை ஆய்வுக்கூட சேவைகள் (Lab services)
- ஊடுகதிர் சேவைகள் (X-ray services)
- பல் மருத்துவ சேவை (Dental Services)

**பார்வையாளர் நேரம் (Visiting Hours)**

| | | |
|---|---|---|
| பொதுவான வார்டுகள் (General Wards) | தினமும் | மதியம் 12 மணி முதல் - மதியம் 2 மணி வரை<br>மாலை 5 மணி முதல் - மாலை 7 மணி வரை |
| சட்டக்காவல் சார்ந்த வார்டு (Ward 75A/B) | ஞாயிறு மட்டும் | காலை 10 மணி முதல் காலை 11 மணி வரை |
| சட்டக்காவல் சார்ந்த வார்டு (Ward 70B) | சனி மட்டும் | மதியம் 2.30 மணி முதல் - மதியம் 3.30 மணி வரை |
| குற்றப்பிரிவு காவல் வார்டு (Ward 70B) | செவ்வாய் & சனி | |
| குற்றப்பிரிவு காவல் வார்டு (Ward 74A/B) | புதன் & ஞாயிறு | |

**கிளினிக் (இயங்கும்) நேரங்கள் (Clinic Hours) (மருத்துவ சந்திப்புக்கு முன்பதிவு செய்யவேண்டும்)**

| | |
|---|---|
| சாயாங் வெல்னஸ் செண்டர் (SWC) கிளினிக்<br>10 புவாங்காக் வியூ, புளோக் 1, மாடி 2 , சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 தொலைநகல் எண்: 63892144 | திங்கள் முதல் வியாழன் வரை: காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை<br><br>வெள்ளி: காலை 8 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| கிளினிக் B<br>10 புவாங்காக் வியூ, புளோக் 1, மாடி 1, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 தொலைநகல் எண்: 63851075 | |
| நெஷ்னல் எடிக்ஷன் மெனஜ்மண்ட் சர்வீஸ் (NAMS) கிளினிக்<br>10 புவாங்காக் வியூ, புளோக் 9, மாடி B1, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 67326837 தொலைநகல் எண் (FAX): 63154837 | |
| சைல்டு கைடன்ஸ் கிளினிக் (CGC) - சன்ரைஸ் விங்க் (Sunrise Wing)<br>10 புவாங்காக் வியூ, புளோக் 3, மாடி B1, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 தொலைநகல் எண்(FAX): 63435129 | |
| சைல்டு கைடன்ஸ் கிளினிக் (CGC) - ஹெல்த் புரோமோஷன் போர்டு (HPB)<br>3 ஹோஸ்பிட்டல் எவன்யூ, #03-01, சிங்கப்பூர் 168937<br>தொலைபேசி: 63892200 தொலைநகல் (FAX): 65368376 | |
| கொமினிட்டி வெல்னஸ் செண்டர் (CWC) - Queenstown<br>580 ஸ்டர்லிங் ரோடு, குவீன்ஸ்டவுன் பலதுறை மருந்தகம்,<br>மாடி 4, சிங்கப்பூர் 148958<br>தொலைபேசி: 63892200 தொலைநகல் (FAX): 64715318 | திங்கள், செவ்வாய் & வியாழன்:<br>காலை 8 மணி முதல்<br>மாலை 5.30 வரை<br>புதன்: காலை 8 மணி முதல்<br>மதியம் 12.30 மணி வரை<br>வெள்ளி: காலை 8 மணி<br>முதல் மாலை 5.00 வரை |
| கொமினிட்டி வெல்னஸ் செண்டர் (CWC) - Geylang<br>21 கேலாங் ஈஸ்ட் சென்ட்ரல், கேலாங் பலதுறை மருந்தகம்,<br>மாடி 4, சிங்கப்பூர் 389707<br>தொலைபேசி: 63892200 தொலைநகல் (FAX):68484579 | |

**எங்களை தொடர்புக் கொள்ள: Contact Us**

| | |
|---|---|
| வெளி மருந்தக சந்திப்பு முன்பதிவு (8am to 6pm) | தொலைபேசி எண்: 63892200<br>மின்னஞ்சல் முகவரி : imh_appt@imh.com.sg |
| பொதுவான தகவல்களுக்கு<br>(24 மணி நேர சேவை) | தொலைபேசி எண்: 63892000<br>மின்னஞ்சல் முகவரி: enquiry@imh.com.sg |
| மருத்துவமனையில் சேர்த்தல் பற்றிய<br>தகவல்களுக்கு (24 மணி நேர சேவை) | தொலைபேசி எண்கள்: 63892003 / 63892004 |
| கட்டணம் பற்றிய தகவல்களுக்கு | தொலைபேசி எண்: 64078128 |
| மருத்துவ பதிவேடு அலுவலகம் | 6389 2031 or email: mro_imh@imh.com.sg |
| சேவைத்தரம் (இலவச அழைப்பு எண்)<br>(திங்கட்கிழமை – வியாழக்கிழமை –<br>8.30am to 5.30pm,<br>வெள்ளிக்கிழமை – 8.30am to 5pm) | தொலைபேசி எண்: 1800 386 4541 மின்னஞ்சல் முகவரி:<br>qsm@imh.com.sg |

| | |
|---|---|
| நெருக்கடி நிலை உதவி எண் (24 மணி நேர சேவை) (மன நல கவனிப்பும் சிகிச்சையும்) | தொலைபேசி எண்: 63892222 |

எங்கள் மருத்துவமனையில் மற்ற கவனிப்பு தொடர்பான நடவடிக்கைகளும் உண்டு தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- உங்களுக்கு தேவையான சிகிச்சைக்கும் பரிசோதனைக்கும் உங்களிடம் ஒப்புதல் கேட்கப்படும். ஆனால், உங்களுடைய மனநிலை ஒப்புதல் தெரிவிப்பதற்கு தடையாக இருந்தால், சிங்கப்பூர் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட விதிமுறைப்படி உங்கள் உறவினரோ அல்லது சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ உங்கள் சார்பாக ஒப்புதல் அளிக்கலாம்.

- மன நல (கவனிப்பும் சிகிச்சையும்) சட்டம் 2008ன் கீழ் IMH அரசிதழ் பதிவுப்பெற்றது. இந்த சட்டம், மன நலம் சரியில்லாத நபர் ஒருவர் தனக்கோ அல்லது மற்றவருக்கோ ஆபத்து விளைவிக்க கூடியவர் என்று நம்பப்பட்டால் அவரை இந்த சட்டத்தின் கீழ் சிகிச்சைக்காக இந்த மருத்துவமனையில் தடுத்து வைக்க முடியும். இம்மாதிரியான அனுமதி கட்டாய அனுமதியாகும். சிகிச்சைக்காக தடுத்து வைத்திருக்கும் காலமும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். இவர்களுக்கான சிகிச்சையும்தானாக, சொந்தமாக மருத்துவமனையில் வந்து சேரும் நோயாளிகளைப் போலவே இருக்கும்.

- எங்கள் மருத்துவமனையில் மருத்துவ ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. அதில் பங்கேற்க நீங்களும் அழைக்கப்படலாம். அத்தகைய சோதனைகள் அனைத்தும் தேசிய சுகாதார பராமரிப்பு குழுவின் (National Healthcare Group) டொமென் ஸ்பஸிஃபிக் ரிவியூ போர்டால் (Domain Specific Review Board) தணிக்கைச்செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவை. உங்கள் சம்மதத்தோடுத்தான் அத்தகைய சோதனைகளுக்கு நீங்கள் தேர்ந்து எடுக்கப்படுவீர்கள். இதில் பங்கேற்காமலோ அல்லது பாதியில் இருந்து விலகிக் கொள்ளவோ உங்களுக்கு உரிமை உண்டு. இதனால், உங்கள் சிகிச்சைக்கோ கவனிப்புக்கோ எவ்வித குறைவும் இருக்காது.

- மருத்துவ மாணவர்களுக்கும் உளவியல் நிபுணர்களுக்கும், தாதியருக்கும் மனோதத்துவ நிபுணர்களுக்கும், மருந்தீட்டாளர்களுக்கும், மருத்துவ சமூகசேவை ஊழியர்களுக்கும், தொழில் வழி சிகிச்சை செய்பவர்களுக்கும் இந்த மருத்துவமனை ‘கற்பித்தல் மருத்துவமனை'-யாக சான்றிதல் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இங்கு நீங்கள் சிகிச்சை பெறும் போதோ அல்லது எங்கள் வெளி மருந்தகங்களிலோ இவர்களை சந்திக்க நேரலாம். ஆனால், இவர்களின் பயிற்சியில் நீங்கள் பங்கேற்பது உங்கள் வாய்மொழி சம்மதத்தோடுத மட்டும் தான். இந்த பயிற்சியில் நீங்கள் பங்கேற்காவிட்டாலும் உங்களது மருத்துவ சிகிச்சையிலும் கவனிப்பிலும் எவ்வித குறைவும் இருக்காது.

மனநல கழகத்தின் (IMH) ன்முக்கியமான முன்னுரிமையும் ஈடுபாடும் உங்களுக்கு முதல் தரமான மருத்துவ சேவை வழங்குவதே. இதில் ஏதும் குறைபாட்டை நீங்கள் உணர்ந்தால் எங்களது மருத்துவ குழுவிடம் தெரிவிக்கவும். உங்களது கருத்துக்களும் விளக்கங்களும் எங்களுக்கு மிகவும் முக்கியம் அவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

நன்றி

Dr Daniel Fung
தலைமை நிர்வாகி (Chief Executive Officer)
மனநல மருத்துவமனை /வூட்ப்ரிட்ஜ் மருத்துவமனை (Institute of Mental Health / Woodbridge Hospital)

இந்த ஆவணம் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இரண்டு வடிவங்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டால், ஆங்கில பதிப்பு நிலவும்.